**செய்தி வெளியீடு எண்: 613** **நாள் : 03.12.2014**

**<u>மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகம், கே.கே. நகர், சென்னை – 78</u>**

## <u>அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் – 2014</u>
## <u>கலை நிகழ்ச்சிகள் மற்றும் மாநில விருதுகள் வழங்கும் விழா</u>

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை பின்பற்றி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் நாள் **"அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக"** தமிழகத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு **3–12–2014** அன்று தமிழகத்தில் அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

இந்த தினம் அனுசரிப்பது தொடர்பாக, 1.12.2014 அன்று காலை **9.00** மணிக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. 54 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு **மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள்** பரிசுளையும், கேடயங்களையும் வழங்கினார்கள்.

3.12.2014 அன்று காலை 11.30 மணிக்கு சென்னை கோட்டூர் கார்டன் பகுதியில் அமைந்துள்ள **சென்னை மாநகராட்சி சிறுவர் விளையாட்டுத் திடல் மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தில்** மாற்றுத் திறனாளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில் ஏறக்குறைய அரசு மற்றும் தனியார் சிறப்புப் பள்ளிகளின் 500 மாற்றுத் திறனாளி குழந்தைகள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

3.12.2014 அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற "அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம்" தொடர்பான அரசு விழாவில் **மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள்** மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக சிறந்த முறையில் சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த முறையில் கற்பித்த ஆசிரியர்கள், சிறந்த தொண்டு நிறுவனம், ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் மற்றும் மாற்றுத் திறனாளிகளில் சிறந்த பணியாளர்கள் ஆகியோருக்கு மாநில விருதுகள் வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்கள் வழங்கியும் விழாப்பேருரை ஆற்றினார்கள்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், திரு. பொ. சிவசங்கரன், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கியும், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப. அவர்களும், சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. செந்தமிழன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழ் நாடு ஜவுளிக் கழகத் தலைவர் திரு. வி.என். ரவி, பகுதிச் செயலாளர் திரு. என்.எஸ். மோகன், சென்னை மாநகராட்சி சுகாதாரக் குழுத் தலைவர் திரு. பழனி மற்றும் திரு. ஜி. கந்தன், வார்டு கவுன்சிலர் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலக இணை இயக்குநர் திருமதி ச. வளர்மதி வரவேற்புரை ஆற்றினார்

திரு. கோ. இரவீந்திரநாத் சிங், துணை இயக்குநர் நன்றி தெரிவித்தார்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**